**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 401/2024**

**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 29th, 2025.

**(எதிரி ஆஜர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை ஐ.சி அலுவலகத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 21.05.2023ம் தேதி, பகல் 12.20 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று, நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.171/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 427, 506(2) IPC –ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை பாவூர்சத்திர பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல்

தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கின் புகார்தாரர் மாரியப்பனிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். புகார் மனு தான் பெற்றேன். புகார் மனுவை மாரியப்பன் தான் கைப்பட எழுதினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார் மனுவை என் முன்னிலையில் வைத்து மாரியப்பன் எழுதவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று புகார்தாரர் மாரியப்பன் என்னிடம் எந்த தகவலும் தரவில்லை. மாரியப்பனிடம் வாக்குமூலம் பெறுவதற்கு நான் செல்வதற்கு முன்பாகவே அவர் புகார் மனு எழுதி தயாராகத்தான் வைத்திருந்தார் என்றால் சரிதான். புகார் மனுவில் மாரியப்பனுக்கு வெளிக்காயங்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து பாவூர்சத்திரம் காவல்நிலையம் 2 கி.மீ தூரம் உள்ளது. நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் அ.சா.1 னிடம் புகார் மனு பெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ன் தாய்மாமா முத்து ஆசாரி அரசியல் செல்வாக்கு மிக்கவர் என்பதினால் காவல் ஆய்வாளரின் கட்டாயத்தின் பேரில் பின்யோசனை செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரரை அ.சா.1 தாக்கி காயப்படுத்திய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அந்த வழக்கை வாபஸ் பெறக்கோரி, எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி மதுரை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Ajaykumar, Assistant Programmer, முதன்மை மாவட்ட நீதிமன்றம், மதுரை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.29 17:36:46 +0530